CC NO. 27/2003 PW-3 (பெயர்: அய்யங்காளை ) தேதி : 28.12.2021

<u>9 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

நான் கூட்டுறவு துறையில் எத்தனை ஆண்டுகள் பணிபுரிந்து இருக்கிறேன் என்றால் 30 ஆண்டுகள் பணிபுரிந்து இருக்கிறேன். நான் ஆர்.எஸ்.மங்களம் பஞ்சாயத்து யூனியன் கூட்டுறவு சார்பதிவாளராக ( விரிவாக்க அலுவலராக) எந்த ஆண்டில் பணிபுரிந்தேன் என்றால் 1994 முதல் 1997 வரை பணியாற்றினேன். இந்த வழக்கு சம்பந்தமாக விசாரணை அறிக்கையை எப்போது ஆரம்பித்து எப்போது முடித்தேன் என்றால் 19.08.1996 ல் ஆரம்பித்து 05.12.1996 ல் முடித்தேன். அறிக்கையை 15.10.1998 ல் சமர்பித்தேன். பிரிவு 81 விசாரணையை 90 நாட்களுக்குள் முடிக்க வேண்டும் என்றால் ஆமாம். இந்த வழக்கில் நான் அறிக்கையை சமர்பிக்க 90 நாட்களுக்கு மேல் எடுத்து கொண்டுள்ளேன் என்றால் சரிதான் . அதற்கு துணை பதிவாளர் அனுமதி பெற்றுள்ளேன். அவ்வாறு அந்த காலதாமத்திற்கு முடிக்கவில்லை என்றால் மேல் அதிகாரியிடம் அனுமதி வாங்க வேண்டும் என்றால் ஆமாம் அனுமதி வாங்கியுள்ளேன். அவ்வாறு அனுமதி பெற்ற கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. ஒரு வழக்கு விசாரணையில் ஒரு அறிக்கை தரவேண்டும் என்றால் சரிதான். ஆனால் நான் இந்த வழக்கில் திருத்தப்பட்ட 2 அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன். அதற்கு தனிப்பட்ட காரணம் என்னவென்றால் நாங்கள் தயாரித்த அறிக்கையை துணை பதிவாளரிடம் சமர்பிப்போம். அது சம்பந்தமாக அவர்கள் கூடுதல் அறிக்கை ஏதாவது இருந்தால் கேட்பார்கள். அதனடிப்படையில் நாங்கள் கூடுதல் அறிக்கையை சமர்பிப்போம். 1996 ல் ஒரு அறிக்கையும் 1998 ல் ஒரு அறிக்கையும் சமர்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த காலகட்டத்தில் ஆர்.எஸ்.மங்களம் சொசைட்டியில் யார் யார் தனி அலுவலராக இருந்தார்கள் என்றால் சலீம், விஜயகுமார் ஆகியோர் இருந்தார்கள். அதில் சலீம் என்ற தனி அலுவலர் எதிரி 9 தினகரன் என்பவருக்கு வழங்கிய கடமைகளும் பொறுப்புகளும் கொண்ட அறிக்கை தான் என்றால் சரிதான். அது எ.த.சா.1 ஆகும். எ.த.சா.1 ன்படி தினகரனுக்கு ரேஷன் கடையில் நேரடியாக நிர்வாகம் செய்யும் கடமையும் பொறுப்பும் அதில் இல்லை என்று சொன்னால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் மேலாளர் என்ற அடிப்படையில் எல்லோரையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் அவருக்கு உள்ளது. அவருக்கு பின்னால் வந்த விஜயகுமார் தனி அலுவலர் கூடுதலாக பொறுப்புகளும் கடமைகளும் வழங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் . அந்த கூடுதல் பொறுப்புகளை தன்னால் கவனிக்க முடியாது என்று தனி அலுவலருக்கு 9 ஆம் எதிரி தினகரன் ஒரு கடிதம் அனுப்பி உள்ளார் என்றால் சரிதான். அது எ.த.சா.2 ஆகும். தினகரன் கேட்டுகொண்டதற்கிணங்க அந்த கூடுதல் பொறுப்புகளில் இருந்து நீக்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 04.12.2000 த்தில் கிளாரன்ஸ் அமர்நாத் என்பவர் முறைகேடுகள் சம்பந்தமாக ஒரு விசாரணை நடத்திய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.அந்த விசாரணை முடிவில் எதிரியின் மீது முறைகேடு நிரூபிக்கபடவில்லை என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விசாரணையின் அடிப்படையில் எதிரி தினகரன் அவருக்கு வரவேண்டிய கிராவிட்டி சம்பந்தமாக மதுரை பனிக்கொடை பட்டுவாடா சட்ட கட்டுப்பாட்டு அதிகாரி அவரிடம் மேல் முறையீடு செய்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த மனுவின் அடிப்படையில் பனிக்கொடை நிறுத்தி வைத்தது தவறு என்று 07.10.2008 த்தில் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அன்றைய தேதியில் நான் ஓய்வு பெற்றுவிட்டேன். இந்த வழக்கில் மற்ற வழக்கில் குற்ற சாட்டுகள் அவர் மீது நிரூபிக்கபடவில்லை என்று பக்கம் 3 ல் பக்கம் 14, 15 ல் கூறப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எதிரியால் எந்த நிதி இழப்பும் ஏற்படவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அவருடைய பயண பட்டியலில் ரேஷன் கடைகளுக்கு சென்று

பரிசோதனை செய்ததாக கூறப்படவில்லை என்றால் அதற்கும் என்னுடைய அறிக்கைக்கும் சம்பந்தம் இல்லை. அந்த ஆவணம் எ.த.சா.4 ஆகும் . அவருடைய கடமை ரேஷன் கடைகளுக்கு சென்று பரிசோதனை செய்வதாகும். தனிஅலுவலர் ரேஷன் கடமை சம்பந்தப்பட்ட ஆய்வுகளை செய்ய வேண்டும் . கடை பூட்டிருக்கிறது என்று சொல்லக்கூடாது என துணை பதிவாளர் ஒரு சுற்றறிக்கை பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான். அந்த சுற்றறிக்கை எ.த.சா.5 ஆகும் . அந்த சுற்றறிக்கையின் படி தனி அலுவலருக்கு தான் சகல அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.த.சா.15 ன்படி தனி அலுவலர் தான் முழு பொறுப்பு என்று சுற்றறிக்கை அனுப்பட்டதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்த சுற்றறிக்கை எ.த.சா.6 ஆகும் . அதனை ஏற்க இயலாது. சாதாரணமாக ஒரு வருடத்திற்கு எத்தனை முறை தணிக்கை செய்வார்கள் என்றால் ஆண்டுக்கு ஒருமுறை தான் தணிக்கை செய்வார்கள். சந்தேகம் ஏற்பட்டால் இடையில் தணிக்கை செய்வார்கள் என்றால் சரியல்ல. ரேஷன் கடைகளுக்கு உண்டான பொருட்கள் அனைத்தும் ராம்கோவிலிருந்து தான் செல்லும் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எந்தெந்த கடைகளுக்கு எவ்வளவு பொருட்கள் செல்கிறது- எவ்வளவு தொகைக்கு செல்கிறது என்று எதிரிக்கு நேரடியாக தெரிய வாய்பில்லை என்றால் அது தவறு. எவ்வளவு விற்பனை செய்தார்கள். எவ்வளவு இருப்பு இருக்கிறது என்று எதிரிக்கு நேரடியாக தெரியாது என்றால் தவறு. எதிரிக்கு எந்தவித தவறும் செய்ய வாய்பில்லை என்றால் சரியல்ல. கூட்டுறவு அதிகாரிகளின் சொல்பேச்சு கேட்டு நடக்கும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கமாட்டார்கள் என்றும் அவர்கள் பேச்சை கேட்காதவர்கள் மீது தான் நடவடிக்கை எடுப்பார்கள் என்றால் தவறு. எதிரி ஒப்பந்தம் போட்ட அறிக்கையை தாக்கல் செய்தாரா என்றால் ஞாபகம் இல்லை. அவ்வாறு எதுவும் இல்லாததால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. எதிரி 1 ஐ நியமித்தது தவறு என்றும் அவரை மீண்டும் பணியில் அமர்த்த கோரியுள்ளதாகவும் மேற்படி மாறுபட்ட கருத்துகளை தெரிவித்துள்ள தங்களின் அறிக்கையில் உள்நோக்கம் இருப்பது தெளிவாகிறது என்று கூறப்பட்டுள்ளது என்றால் இந்த கடிதம் விற்பனையாளரை ஒரு ரேஷன் கடையில் இருந்து இன்னொரு ரேஷன் கடைக்கு மாற்றி பணி அமர்த்துவதற்கு உண்டான உத்தரவு ஆகும் . அந்த உத்தரவு எ.த.சா. 7 ஆகும். அதற்கும் என்னுடைய அறிக்கைக்கும் சம்பந்தம் இல்லை . கூட்டுறவு , இணைபதிவாளர், மாவட்ட பதிவாளர் அவர்களுக்கு கீழ் பணிபுரியும் பணியாளர் என்றால் சரிதான் . அவர்களுடைய ஆணைக்கிணங்க நடப்பது என்னுடைய கடமை என்றால் சரிதான். அதனால் தான் நான் 1996 ல் ஒரு அறிக்கையும் தாக்கல் செய்துவிட்டு அவர்கள் கேட்டுகொண்டதற்கிணங்க 1998 ல் மீண்டும் ஒரு அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அவர்களுடைய உத்தரவிற்கு கட்டுப்பட்டு நடப்பது என்னுடைய கடமையாகும். என்னுடைய காலகட்டத்தில் ரேஷன் கடைகளுக்கு சோதனை செய்ய போயிருக்கிறேனா என்றால் போயிருக்கிறேன். அந்த காலகட்டத்தில் குறைபாடு குறித்து மேல் அதிகாரிக்கு தகவல் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. விசாரணை அறிக்கையில் பத்தி 6, 7 ல் கூறப்பட்டுள்ளவை பொய் என்று சொன்னால் அது தவறு. இந்த குற்றச்சாட்டுகளுக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தம் இல்லை என்று சொன்னால் தவறு. அவர் நேரடியாக சென்று பணம் பெற வாய்பில்லை என்று சொன்னால் தவறு. இவருக்கு குடிமை பொருள் வழங்கும் அதிகாரம் இல்லை என்று சொன்னால் தவறு. மேலாளர் என்ற முறையில் அன்றாட வரவு செலவுகளை தான் பார்க்க வேண்டும் தவிர இதர இனங்களுக்கு இவர் பொறுப்பில்லை என்றால் தவறு. 9 ஆம் எதிரி மற்ற எதிரிகளுடன் சேர்ந்து உடந்தையாக இருந்தார் என்பதை காண்பிக்க எந்த ஆதாரமும் இல்லை என்றால் தவறு. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் மேல் அதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க எதிரியை இந்த வழக்கில் பொய்யாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. தணிக்கை செய்யும்போது தவறு நடந்திருந்தால் தெரிந்திருக்கும் என்றால் தவறு. மேற்சொன்ன காலகட்டத்தில் தனி அலுவலர் செய்யும் தவறுகளுக்கு அவர்கள் மீது எந்த

நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் தவறு. சக அதிகாரி என்பதால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் எதிரிகள் மீது பழிவாங்கும் நோக்கோடு வழக்கு பதிவு செய்யபட்டுள்ளது என்றால் தவறு. இந்த எதிரிகள் மீது ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டுள்ள வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்களா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த உத்தரவு படி எதிரி எந்த குற்றமும் செய்யவில்லை என்றால் என்னுடைய விசாரணையின் போது இந்த நடவடிக்கைகள் ஏதும் வரவில்லை . நான் அப்போது ஓய்வு பெற்றுவிட்டேன். என்னுடைய விசாரணை அறிக்கையே தவறு என்றால் சரியல்ல. எதிரியை இந்த வழக்கில் சேர்ப்பதற்காக சில வாசகங்களை சேர்த்துள்ளேன் என்றால் அது தவறு. நான் முறையாக விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் இயந்திர தனமாக செயல்பட்டுள்ளேன் என்றால் தவறு.

<u>எதிரிகள் 1, 3, 4, 6, 7 தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

நான் ஏற்கனவே அறிவழகன் மீது தாக்கல் செய்த CC.NO.158/2001 ல் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஆமாம். எதிரி அறிவழகன் திரானி நியாய விலைகடையில் விற்பனையாளராக இருந்தபோது நடைபெற்றதாக சொல்லபடுகின்ற முறைகேடுகளுக்காக நடைபெற்ற வழக்கு என்றால் சரிதான். அந்த திரானி நியாய விலைகடையில் விற்பனையாளராக இருந்த பின்னர் சருகனி நியாய விலைகடையில் விற்பனையாளராக நியமிக்கப்பட்டார் என்றால் சரிதான். திரானி நியாய விலைகடையில் விற்பனையாளராக பணியாற்றியபோது 9 ஆம் எதிரி தினகரன் தான் மேலாளர் என்றால் சரிதான். திருப்பாலைகுடி நியாய விலைகடை, நாகமதி நியாய விலைகடை, செவ்வாய்பேட்டை நியாய விலைகடை, சருகனி நியாயவிலைகடை ஆகிய கடைகளுக்கு எல்லாம் தனி அலுவலர் இருந்தாரா என்றால் இல்லை. கடைகள் எல்லாம் நிர்வகிக்க கூடிய அலுவலகத்திற்கு தனி அலுவலர் இருந்தார். அந்த தனி அலுவலர் முறைகேடுகள் நடந்ததாக சொல்லபடும் காலகட்டத்தில் யார் இருந்தார் என்றால் ஞாபகம் இல்லை. மேற்கண்ட நியாயவிலைகடைகள் எல்லாம் திருவாடனை கூட்டுறவு பண்டக சாலையின் கட்டுபாட்டுக்குள் வருகிறது என்றால் ஆமாம். பண்டக சாலையின் மேலாளர் தான் 9 ஆம் எதிரி மேலாளர் என்றால் ஆமாம். விற்பனையாளர்கள் விற்பனை செய்த பணத்தை யாரிடம் கொடுப்பார் என்றால் மேலாளரிடம் கொடுத்து ரசீது வாங்கி செல்வார்கள். ஒவ்வொரு நியாய விலைகடையிலும் அவ்வப்போது கணக்கு வழக்கு பார்ப்பது, அவ்வாறு கணக்கு வழக்குகளில் குறைபாடுகள் இருந்தால் அதனை சுட்டிகாட்டுவது யாருடைய பொறுப்பு என்றால் மேலாளர் பொறுப்பாகும். நியாய விலைகடையில் முறைகேடுகள் நடந்திருந்தால் தனி அலுவலர் இருந்தால் அவர் பார்க்க வேண்டும் இல்லை என்றால் தலைவர் பார்க்க வேண்டும் என்றால் மேலாளர்தான் பார்க்கவேண்டும். நியாயவிலைகடைகளின் சொத்துக்களின் பொறுப்பு யாருடையது என்றால் மேலாளர் உடையது. பண்டக சாலையிலிருந்து நியாயவிலைகடைகளுக்கு ஒப்படைக்கப்படும் பொருட்களுக்கு மேலாளர் எந்தெந்த பொருள்கள் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறாரோ அந்த பொருட்களை கொடுக்க வேண்டும் என்றால் ஆமாம். என்னுடைய விசாரணை அறிக்கையின் போது மேலாளர் எந்தெந்த நியாயவிலைகடைகளுக்க என்னென்ன பொருட்கள் ஒப்படைக்க வேண்டும் என்பதற்குண்டான ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்றால் கொடுத்திருக்கிறேன். நான் 1996 ல் அறிக்கையும் 1998 ல் ஒரு அறிக்கையும் கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 81 ன் படி ஒரு அறிக்கை கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் 2 அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் மேல் அதிகாரிகளின் உத்தரவு படி இன்னொரு அறிக்கை சமர்பித்துள்ளேன். அவ்வாறு உத்தரவு பிறப்பித்த அதிகாரி யார் என்றால்

ஞாபகம் இல்லை. மேல் அதிகாரிகளின் குறைபாடுகளிலிருந்து தப்பிக்க வைப்பதற்காக 2 வது அறிக்கை சமர்பித்தேன் என்றால் தவறு. உயர் அதிகாரிகள் செய்த தவறுகளை இந்த எதிரிகள் செய்ததாக ஆவணங்களை திருத்தி அறிக்கை சமர்பித்துள்ளேன் என்றால் தவறு. இந்த வழக்கில் எதிரிகள் 1, 3 , 4, 6, 7 வாங்குவதிலும் விற்பனை செய்வதிலும் தவறுகள் ஏதும் செய்யவில்லை என்றால் தவறு. தவறுகள் செய்தது போல் மேல் அதிகாரிகள் ஆவணங்களை திருத்தி எழுதி கொண்டார்கள் என்றால் தவறு. எதிரிகள் 1, 3 , 4, 6, 7 ன் பொறுப்புகளும் கடமைகளும் என்ன என்று பார்ப்பதற்கு தீர்மானத்தை பார்த்துள்ளேன் என்றால் பார்த்துள்ளேன். அந்த தீர்மானங்களின் படி எதிரிகள் 1, 3 , 4, 6, 7 கணக்கு வழக்குகளை எழுதுவது இல்லை என்றால் தவறு. அந்த தீர்மானங்களை கொடுத்திருக்கிறேனா என்றால் ஞாபகம் இல்லை . அந்த தீர்மானத்தில் எதிரிகள் 1, 3 , 4, 6, 7 பணத்தை இருசால் செய்யவேண்டிய பொறுப்பும் இந்த எதிரிகளுக்கு இல்லை என்பதால் தான் அந்த தீர்மானத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. என்னுடைய அறிக்கையின் படி எதிரிகள் 1, 3 , 4, 6, 7 எந்த வித தவறும் செய்யவில்லை என்றால் தவறு. 81 அறிக்கை சட்டபடி செல்லத்தக்கதல்ல என்றால் தவறு. எதிரிகள் வேண்டும் என்றே சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் தவறு.

<u>எதிரிகள் 5, 8 தரப்பில் கு.வி ;-</u>

எதிரிகள் 1, 3, 4, 6 , 7 தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததை தங்களுடைய தரப்பு குறுக்கு விசாரணையாக கருதி கொள்ளும்படி கோரினார்.